**தலைப்பு – 101 புத்தசாசன அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு - 101 புத்தசாசன அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 02 ஆம் திகதி அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 901.62 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 871.72 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 29.90 மில்லியன் அதாவது, 3.32 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 175.02 | 162.73 | 12.29 | 7.02 |
| மூலதனம் | 726.60 | 708.99 | 17.61 | 2.42 |
| **மொத்தம்** | 901.62 | 871.72 | 29.90 | **3.32** |

## 2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 10101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன்கள் | ரூபா மில்லியன்கள் | ரூபா மில்லியன்கள் | ரூபா மில்லியன்கள் | ரூபா மில்லியன்கள் | ரூபா மில்லியன்கள் |
| 7.00 | 6.56 | 2.40 | 3.49 | 22.00 | 14.52 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் 7002/0000/00/0209/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 30,000 தொகையாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழுள்ள 4 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 68.86 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0002/0058/000 | 0.19 |
| 6000/0000/00/0018/0015/000 | 25.81 |
| 6000/0000/00/0016/0013/000 | 42.74 |
| 6000/0000/00/0013/0149/000 | 0.12 |
| | 68.86 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

புத்தசாசன அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

நிதிப்பிரமாணம் 891(i) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பாதுகாப்பு வழங்குவதற்கு தேவையான உத்தியோகத்தர்களின் பெயர்களினை உள்ளடக்குகின்ற பாதுகாவலர்களின் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சானது பாதுகாவலர் பதிவேட்டை பராமரித்திருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2017 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 123.35 மில்லியன் தொகையாக இருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 8,875,856 கூட்டுத்தொகையான 07 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**சொத்துக்களினை மதிப்பிடாமை**

அமைச்சின் பொறுப்பிலுள்ள குறுண்டகுலம ராஜரட்ட சுற்றுலா விடுதி மற்றும் காணியை மதிப்பீடு செய்து பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 கடப்பாடுகளை ஏற்படுத்தல்

நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 14 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னரான சேமிப்புக்களை விஞ்சி ரூபா 2.31 மில்லியன் கடப்பாடுகள் ஏற்பட்டிருந்தது.

### 3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (அ) நிதிப் பிரமாணம் 104 | 212,683 | நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம், நட்டம் மற்றும் சேதம் ஏற்பட்ட உடனே நட்டத்தின் அளவை மற்றும் காரணங்களை தீர்மானிப்பதற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கும் விசாரணைகளை மேற்கொள்ளப்படவேண்டும். எனினும், இது இரண்டு மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொதுக்கணக்குகள் சுற்றறிக்கை | | |
| 2015 யூன் 24 இன் 243/2015 ஆம் இலக்க பொதுக்கணக்குகள் | 5,000,000 | 2015 ஆம் ஆண்டில் பண்டிகையை கொண்டாடிய பின்னர் அனுசரணையாளர்களால் அரச வெசாக் பண்டிகைக்கால வழங்கப்பட்ட பணங்களானது |

| | |
|---|---|
| சுற்றறிக்கை மற்றும் அரசியலமைப்பின் 149(1) ஆம் பிரிவு | திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக, இது புத்த சாசன நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. |

**3.7 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீட்டு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முறைகள் தொடர்பில் அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) முக்கிய தொழிற்பாடுகளிற்கு முரணான நடவடிக்கைகள்**

அமைச்சினால் அதனது நோக்கத்திற்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுப் பரிசோதனைகளின் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

**தேசிய போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2016**

போதைப்பொருட்களை நடாத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகையான ஏற்பாடுகளில் 54 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 2,698,750 தொகை பௌத்த அலுவல்கள் அமைச்சிற்கு தென் மாகாணத்திலும் தர்மா பாடசாலை மாணவர்களுக்கு உரைநடை, கவிதை மற்றும் குறுங்கால நாடகப் போட்டியை நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத முக்கிய தொழிற்பாடுகள்**

**அரச வெசாக் பண்டிகை – 2016**

2016 ஆம் ஆண்டின் போது அரச வெசாக் பண்டிகையானது அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெறறியவின் பிரதேச செயலக பிரிவிற்கு சொந்தமான நைஹால ராஜ மஹா விகாரையில் நடைபெற்றிருந்தது. ஆலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக மற்றும் பண்டிகையை நடாத்துவதற்காக ரூபா 47,559,140 தொகையை அமைச்சு செலவிட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்த சாசன அமைச்சானது அரச வெசாக் பண்டிகையை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அதற்கான வேலைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் திட்டவட்டமாக தீர்மானித்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நைஹால ராஜமஹா விகாரையின் திருத்தங்களிற்காக ரூபா 14,608,026 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. அதன் செலவினங்களுடன் தொடர்பான விரிவாக தகவல்களுடன் பெறுகை வழிகாட்டியின் 4.3.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அனைத்து சம்பந்தமான செலவினங்களை உள்ளடக்கி மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கேற்றவாறு அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) வெசாக் பண்டிகைக்குரிய நைஹால மற்றும் காசஹல விகாரைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வேலை தொடர்பிலான அறிக்கைகள் இல்லாதிருந்ததுடன் செலவினங்கள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.8 வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் வழமையிலிருந்து வேறுபட்டிருந்தது. அத்தகைய அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) நாகதீப ராஜ மஹா விகாரையின் நிர்மாணத்திற்கான நிதிசார் உதவியின் ஏற்பாடு

புத்தசாசன அமைச்சால் நாகதீப ராஜத மஹா விகாரையிலுள்ள தர்மசாலவின் 3 ஆவது மாடியை நிர்மாணிப்பதற்கு ரூபா 6,657,605 தொகை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்மாணங்கள் மெற்கொண்ட இராணுவப் படையிடமிருந்து அமைச்சானது நிர்மாணங்கள் தொடர்பிலான செலவினம் மீது மதிப்பீடொன்றையும் அறிக்கைகளையும் பெற்றிருக்கவில்லை.

(ii) நிர்மாணங்களானது 2016 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும், 2016 ஆகஸ்ட் 22 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது, ஒட்டுமொத்த பூர்த்தியாக்கல் வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றமானது 58 சதவீதமாகவிருந்தது என அவதானிக்கப்பட்டது. உரிய நடவடிக்கைகள் திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்பட்டிருந்தமை என அமைச்சின் செயலாளர் பதிலளித்திருந்த போதிலும், உரிய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஆசிஹிறி மஹா விகாரையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஏற்பாடுகளை விடுவித்தல்

இராணுவப் படைத் தளபதிக்கு செலுத்தப்பட்ட ரூபா 87.88 மில்லியன் மற்றும் இலங்கை மின்சார சபை, கண்டி மாவட்டச் செயலகம் மற்றும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 33.91 மில்லியன் தொகையும் உள்ளடக்கி ரூபா 121.79 மில்லியன் கூட்டுத்தொகையானது ஆசிஹிறி மஹா விகாரையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களமானது ஆசிஹிறி மஹா விகார அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 91 மில்லியன் மதிப்பீடொன்றை தயாரித்திருந்தது. மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காத கண்டி கட்டுகஸ்தோட்ட வீதியிலிருந்து வகல்கட்ட வரையிலான வீதிக்கு காப்பற் போடுவதற்காக இராணுவத் தளபதிக்கு ரூபா 20 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலதிக மதிப்பீட்டில் உள்ளக்கப்பட்டிருக்காத வீதி அபிவிருத்தி மற்றும் மின்சார வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்காக திறைசேரியிடமிருந்து மேலதிக ஏற்பாடுகள் பெறவேண்டியிருந்ததுடன் பூஜாவகூம அபிவிருத்தி தொடர்பான

செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட பணங்கள் அதற்காக பயன்படுத்தப்படவேண்டியிருந்தது.

(ii) கட்டிடத்தின் வலப்பக்கம் தொடர்பான குன்றானது அகற்றப்பட்டிருந்ததுடன் மணல் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது என்பது விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மதிப்பீட்டின் பிரகாரம், சாக்கடைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கூரையிலிருந்து விழுகின்ற மழைத்தண்ணீரை அகற்றுவதற்கும் வடிகால் கழிவுகளை அகற்றுவதற்கும் திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) ஆசிஹிறியா அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் உபாலி மஹா தீரோ கொமேமோறரிவ றெஸ்ர் இன் நிர்மாணித்தலிற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காத போதும், அமைச்சரவையின் அங்கீகாரத்தை கவருகின்ற வகையில் 4 சந்தர்ப்பங்களில் ரூபா 15 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையின் அங்கீகாரம் அதற்காக பெறப்பட்டிருக்கவில்லை. அதற்குமேலதிகமாக, அத்தகைய கொடுப்பனவுகளிற்காக பற்றுச்சீட்டு பெறப்பட்டிருக்கவில்லை.

(vi) உபாலி மஹா தீரோ கொமேமோறரிவ் றெஸ்றானது தனது ஒப்பந்தகாரர்களை ஈடுபடுத்துவதன் மூலம் தனிப்பட்ட நிதியத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணம் ஆகும். அதனுடைய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக அரச நிதியங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், பயன்படுத்தப்பட்ட நிதியங்களின் செயலாற்றல் தொடர்பான அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(vii) 320 அடி நீளத்துடனும் 22 அடி அகலத்துடனான கொங்கிறீட் சுவரை நிர்மாணிப்பதற்காக ரூபா 17.15 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. நுழைவு வீதியின் இடஅமைவு அலுவலக ஆராமயாவை விட அடி மட்டத்தில் அதிகமாகவிருந்தது. அதனால், நீர்ப்பாய்ச்சலானது அலுவலக ஆராமனியாவை நோக்கியிருந்தது என அவதானிக்கப்பட்டது. அதனை தடுக்கும் நோக்கில், ஆசிஹிறி விகாரையின் நுழைவு வீதியுடன் இணைப்பதற்கான காணியின் படலத்தை அகற்றுவதற்கு இது முன்மொழியப்பட்டதுடன் குறைந்தளவில் அமைந்திருந்தது. அதனால், சுவர் நிலத்தின் நிர்மாணங்கள் அரைவாசியில் கைவிடப்பட்டிருந்தது.

(viii) ஆங்கில மொழி தர்ம பாடசாலை மற்றும் பிக்சு பயிற்சி நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கு கண்டி மாவட்ட செயலாளருக்கு ரூபா 2.00 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடத்தின் நிர்மாணங்கள் தொடர்பிலான செயன்முன்னேற்ற அறிக்கைகள் அமைச்சால் பெறப்பட்டிருக்கவில்லை.

(ix) ஆசிஹிறிஹியா விகாராவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திட்டங்களை தயாரிப்பதற்காக மற்றும் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் வழங்குவது தொடர்பில் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு ரூபா 1.20 மில்லியன் தொகை 2 சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டில் 5 சதவீதமாக செலுத்தப்பட்டிருந்தது. இத்தகைய கொடுப்பனவுகள்

தொடர்பில் 2012 பெப்ரவரி 15 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை போலியானதென கணக்காய்வில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகள் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 09 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 141 | 80 | 61 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 28 | 08 | - |
| (v) | ஒப்பந்த அடிப்படை | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 193 | 122 | 75 | 04 |